முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1092

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.09.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. தவராஜனே அரங்கா போற்றி
   தன்னிகரில்லாத தர்மம் வளர்க்கின்ற
   அவதாரனே ஆறுமுக அரங்கனே போற்றி
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08ம் நாள், 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை)
   இயம்பிடுவேன் சுபகிருது நங்கை திங்கள்
   துணிவுகொண்டு அரங்கன் தொண்டர்களெல்லாம்
   தேசமெங்கும் நடத்துகின்ற அன்னதான சேவை
3. சேவையே இந்த உலகத்தை மாற்றும்
   சுத்த சன்மார்க்க நெறியே
   உலகமக்களுக்கு ஞானம் அருளும்
   அவனியில் அரங்கன் திருவடி பாற்றி
4. அரங்கா முருகா என ஜெபதபம் கூறி
   அனுதினமும் தர்மத்தை தொடர்ந்து செய்ய
   செய்யவே ஞானவான்கள் என்கின்ற படை
   ஜெகமெல்லாம் பரவி இனிதே
5. ஐயன் ஆறுமுகன் என்னருளாலே
   ஆற்றல்பட உலகமாற்றம் நிகழும்
   நிகழுமப்பா ஞான யுகமாற்றமாக
   நிலமதனில் அரங்கன் நீ தேடுகின்ற
6. வகையான தொண்டர் படைகளோடு
   வையகமே ஞானவான்கள் தலைமை கூடி
   கூடியே ஞான ஆட்சிகாணும்
   குரு அரங்கனால் இவை அனைத்தும் சித்திக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–